

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி, புகழூர் நகராட்சி, முல்லை நகர் பகுதியில், புதிய பசுமைப் பூங்காவை மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அருகில் உள்ளனர்.

### புதுக்கோட்டை வடக்கு – கந்தர்வக்கோட்டை தொகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

### தமிழ் கா.அமுதரசன் – அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப் பாண்டியன் கண்டன உரை!

புதுக்கோட்டை, ஏப். 18-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக் கோட்டை சட்டமன்ற தொகுதிதி.மு.க. இளைஞர் அணி அணி சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நாளை (19.04.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மு. கலைஞர் கருணாநிதி தலைமையில் நடைபெறுகிறது.

கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ். ஆர். கலையரசன் வரவேற்புரை ஆற்றுகிறார். துணை அமைப்பாளர்கள் மு. நமச்சிவாயம், ரா. அசோக்குமார், ரா.முத்துசாமி, போஸ்கோ , கே.பிரகாஷ், மு.கஜேந்திரன், கே.சரவணன், புகழேந்தி, மணிவண்ணன் (எ) மதன், பிரபாகரன், அருண்குமார், முருகேசன், ஞானசந்திரன், கோபாலகிருஷ்ணன், சிவ குரு, கூத்தபெருமாள், சாகுல் ஹமீது, இளைய ராஜா, ரமேஷ், குமார், பா.வீரமணி, மணிவண்ணன், சின்னையா, சண்முகநாதன், அசோக்குமார், பிரபாகர், முத்துப்பாண்டி வீரமணி, மணிவண்ணன், சிலம்பரசன், பாண்டியன், ஜியாவுல் ரகுமான், ஆனந்த், பிரகாஷ், சத்யராஜ், ராஜேஷ், அப்துல்லா, பிரசாத், முருகேசன், லட்சுமணன், கற்பூரசோழன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக மாணவரணி துணைச் செயலாளர் தமிழ் கா அமுதரசன், இளம் தலைமை கழக பேச்சாளர் நேரு, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழக தலைவர் நா.இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் சு. சண்முகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

நிகழ்வில் எம் எம் அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், பி.டி.அரசகுமார், அரு.வீரமணி,

புதுக்கோட்டை விஜயா, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை, எம்.எஸ்.அசோக்பாண்டியன், எஸ்.எஸ்.கருப்பையா, க. மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, கீரை.தமிழ் ராஜா, கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், மு.பி.ம.சத்தியசீலன், அ. இளங்குமரன், கே.பி. அய்யப்பன், வே.ராஜேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம். பழனியப்பன், என். சாத்தையா, இராசு.சந்தோஷ், ராப்பூசல் எம்.செந்தில் குமார், சி.ஆர்.வி.சித்ரா, பேரூர் கழக செயலாளர்கள் வை. விஜயகுமார், எம்.எஸ்.ஏ. முகமது நிஷா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் கந்தர்வ கோட்டை வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் த.அரவிந்தன், கரம்பக்குடி வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கோ. செல்லத்துரை ஆகியோர் நன்றியுரை கூறுகின்றனர்.

### மயிலாடுதுறையில் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளில் சமத்துவ நாள் விழா!

# 1090 பயனாளிகளுக்கு ரூ.18 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா எம்.முருகன் - பன்னீர்செல்வம் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஏப். 18–

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில்தனியார் திருமண மண்டபத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் 1090 பயனாளிகளுக்கு ரூ.18 கோடியே 65 லட்சத்து 33 ஆயிரத்து 651 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் .சிவ. வீ.மெய்யநாதன் வழங்கினார்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் நடைபெற்ற சமத்துவ நாள் விழா நடைபெற்றது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் .ஹெச். எஸ்.ஸ்ரீகாந்த் தலைமைவாங்கினார். மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் .நிவேதா எம். முருகன்,சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்; செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ். ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விழாவில் 1090 பயனாளிகளுக்கு ரூ.18 கோடியே 65 லட்சத்து 33 ஆயிரத்து 651 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை பிற்படுத்தப்ப ட்டோர் நலத்துறை அமைச்சர் .சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்து. மகேந்திரன், மாவட்ட கழக துணை செயலாளர் மு..ஞானவேலன், எஸ். செல்வமணி, மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், இலக்கிய அணி மாநில துணை செயலாளர் சௌமியன், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவரும், நகர கழக செயலாளர் குண்டா மணி (எ) என்.செல்வராஜ், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ப.முருகமணி, ஞான.இமயநாதன், என்.இளைய பெருமாள், ஏ.ஜி.ஜே. பிரபாகர், பஞ்சு.குமார், செல்லசேது. ரவிக்குமார், பி.எம்.அன்பழகன், எம். அப்துல் மாலிக், அமிர்த. விஜயகுமார், ஏ.ஆர்.ராஜா. எம் .கே .மருது, ஆர்.கே.சங்கர், முகம்மது ஷபீர், உமாமகேஷ்வரி, சுகுண சங்கரி, கீதா, செல்வகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. சின்னச்சாமி

### ஏப்ரல் 18 (2005)



கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றி, தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – மதுரை மாநகராட்சி துணை மேயராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்றதோடு, கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கும் மண்டலம் 9–இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |
| 26.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | | விளாத்திகுளம் | ஜி.வி.மஹால் விளாத்திகுளம் |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 16-04-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா!

### சி.மணிமாறன் தலைமையில்!

நாமக்கல், ஏப்.18-

"வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14 ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்" என தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்து, அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் அன்றும் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, "சமத்துவநாள்" உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தலைமைக் கழகம் அறிவிப்பின் படி தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும்,

நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வழிக்காட்டுதலின் படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் "சமத்துவ நாள்" உறுதிமொழி ஏற்று அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் கொண்டாடப் பட்டது.

அதன்படி நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் முன்னிலையில் "சமத்துவ நாள்" உறுதிமொழி ஏற்று அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் ப.இராணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர். இரா. மாயவன், மாநகராட்சி மேயர் து.கலாநிதி, நாமக்கல் கிழக்கு நகர செயலாளரும், மாநகராட்சி துணை மேயருமான செ.பூபதி, நாமக்கல் மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆர்.ஆனந்த், நாமக்கல் ஒன்றிய செயலாளர் வி.கே.பழனிவேல், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் பா.கிருபாகரன், நாசர்பாஷா, முரளி, ராஜவேல் மற்றும் வார்டு செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர்

# கோ.தளபதி எம்.எல்.ஏ. தாயார் மாரியம்மாள் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப் 18–

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ.வின் தாயார் மாரியம்மாள் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அவர்களின் தாயார் மறைவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மதுரை மாநகர் தி.மு.கழகச் செயலாளருமான கோ.தளபதி அவர்களின் தாயார் திருமதி மாரியம்மாள் அவர்கள் முதுமை காரணமாக மறைவெய்திய செய்தி அறிந்து வருந்துகிறேன்.

ஆளாக்கி வளர்த்த அன்பு அன்னையை இழந்து வாடும் தளபதி அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ். பாண்டியன்

### ஏப்ரல் 18 (2019)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே மாணவர் அணியிலும், பின்னர் வழக்கறிஞராக பதிவு செய்த பின்னர் மாவட்ட வழக்கறிஞர் அணியிலும் பணியாற்றினார்.

மதுரை மாநகர் மாவட்டம், காமராஜபுரம் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**